மயிலாடுதுறை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
மூ.மு எண்: 707 /அ1/2021, நாள்: 24.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு – அமைச்சுப்பணி – கருணை அடிப்படை நியமனம் – நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி வட்டம், ஆக்கூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி – பட்டதாரி ஆசிரியர் திருமதி.வ.கலைச்செல்வி – 18.02.2016 இல் இறப்பு – வாரிசுதாரரான மகள் திருமதி.ச.பூஜா என்பார் இளநிலை உதவியாளராக 01.08.2023 முற்பகல் நல்லாடை, அரசு உயர்நிலைப் பள்ளியில் பணியில் சேர்ந்தார் – 01.08.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் சார்பு.

பார்வை: 1.அரசாணை நிலை எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த்துறை நாள் – 23.01.2020
2. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1)த்துறை நாள் – 09.09.2022
3.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.026062/ஜே/இ4/2023 நாள் – 28.07.2023
4.நல்லாடை அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண்.281/2024 நாள் – 26.02.2024

-------

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், ஆக்கூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த திருமதி.வ.கலைச்செல்வி என்பார் பணியில் இருக்கும் போதே 18.02.2016இல் காலமானார். அவரது மகள் திருமதி.ச.பூஜா என்பார் கருணை அடிப்படையில் பணியில் நியமனம் வழங்கக்கோரி 26.07.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திருமதி.ச.பூஜா என்பார் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 2010இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 14.04.1995. மேலே (1)இல் படிக்கப்பட்ட அரசாணைப்படி தனியார் கருணை அடிப்படையிலான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

திருமதி.ச.பூஜா என்பார் பார்வை (3)இல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின் படி மயிலாடுதுறை மாவட்டம், நல்லாடை, அரசு உயர்நிலைப் பள்ளியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் 01.08.2023முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க வேண்டி பார்வை (4)இல் காணும் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. கருத்துருக்களை பரிசீலனை செய்து தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ச.பூஜா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர்/பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | கல்வித் தகுதி | பிறந்த தேதி மற்றும் பணிநியமன நாளில் வயது | இளநிலை உதவியாளர் பணியில் | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | திருமதி.ச.பூஜா, இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லாடை | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 14.04.1995 22 வயது | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

இத்துடன் பெறப்பட்ட தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றிதழ்கள் பரிசீலனைக்குப் பின் திரும்ப அனுப்பி வைக்கப்படுகிறது.

இவ்வாணை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலையும், பணிவரன்முறை சார்ந்த பதிவுகளை தொடர்புடையவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும், சார்ந்த அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
மயிலாடுதுறை.

பெறுநர்,

1.தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லாடை
(தொடர்புடையவர் கூடுதல் படியுடன்)

நகல்,

1. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) சென்னை – 06 பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) மயிலாடுதுறை.